அன்று கைது செய்யப்பட்டு இருப்பது பற்றி அதன் மீது பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க இச்சட்டமன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எத்திராஜுலு அவர்கள் தலைமையில் ஒரு ஊர்வலம் வருவதாகவும் அவர்கள் சட்டசபை வாசலில் கோட்டை வாயிலில் வந்து சாத்வீக முறையில் மறியல் போராட்டம் நடத்துவார்களென்றும் அவர்களுடைய காரியதரிசி ஏ. பி. கருப்பையா என்பவரும் வெங்கடசாமி என்பவரும் ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு எத்திராஜுலு தலைமையில் கோட்டை நோக்கி வந்திருக்கிறார்கள். அப்படி ஊர்வலம் வரும்போது ஏற்கனவே அமுலில் இருக்கிற 41-வது விதியின்படி போலிசாரால் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் அதையும் அவர்கள் மீறி கோட்டை நோக்கி வந்த காரணத்தினால் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தச் செயலாளர் கருப்பையா தந்திருக்கிற ஒரு வேண்டுகோளில் அவர்கள் ஊர்வலமாக வந்து முதலமைச்சரிடம் மகஜர் அளிக்க விரும்பினார்கள், போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களே போட்டிருக்கிற நோட்டீஸில் நாங்கள் மறியல் செய்யப்போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் தெரிவித்ததும் இன்றையதினம் தந்திருக்கிற வேண்டுகோளும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் உண்மைக்கு மாறான நிலையில் உள்ளதாகவும் இருக்கிறது. போலீசார் ஏற்கனவே விதித்திருக்கிற சட்டப் பிரிவின்படி அதை மீறி வந்தார்கள் என்பதற்காக அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இது அன்றாட அலுவலின்கீழ் வருமே தவிர, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய ஒன்றல்ல என்று தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : I did not take it as an adjournment motion at all. I just allowed it to be raised in the House.

## III. CALLING ATTENTION TO GRANT OF LOAN BY GOVERNMENT AND NON-AVAILABILITY OF EXPLOSIVES AND DETONATORS FOR DEEPENING WELLS IN SALEM DISTRICT.

**திரு. பி. டி. முத்து:** கீழ்க்கண்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் ; அதாவது சேலம் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான வெடி மருந்துகளும், தோட்டாக்களும் சுலபமாகக் கிடைக்காமலிருப்பதைக் குறிப்பதாகும்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government are aware that there is acute shortage of drinking water in Salem District. As part of drought relief measures, a sum of Rs. 4.8 lakhs has been given to Salem District for deepening of drinking water wells. Another Rs. 10 lakhs are being given for the same purpose. The situation will be watched and more funds provided in order to ensure the supply of drinking water all over the district.

**திரு. பி. டி. முத்து:** தலைவர் அவர்களே, இன்றைக்கு எங்கள் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் தங்கள் கிணறுகளை ஆழப்படுத்த நிதி வசதி பெற முடியவில்லை. நில அடமான வங்கியைக் கேட்டால் அடிக் கிணறு வெட்ட லோன் தர மறுக்கிறார்கள். கிணறுகளை ஆழப்படுத்த பணம் கொடுக்க வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினரின் யோசனைகளை பரிவோடு கவனிக்க வேண்டும் என்று கலெக்டரைக் கேட்டுக் கொள்ளலாம்.

**திரு பி. டி. முத்து :** கிணறு வெட்டுவதற்கு தோட்டா கிடைப்பதில்லை. பல்லாவரத்தில் தோட்டா கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போது இரண்டு மூன்று தினங்களாக லைசென்சுதாரர்களுக்குக் கூட தரமறுக்கிறார்கள். உங்கள் மாவட்டத்திலேயே வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் தொழிலாளர் அமைச்சரின் சுற்றுப் பயணத்தின்போது கூட விவசாயிகள் முறையிட்டிருக்கிறார்கள். இந்தத் தோட்டாக்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதற்கான வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. சேலத்தில் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

## IV. PRESENTATION OF THE SEVENTEENTH REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I have great pleasure in submitting the Seventeen Report of the Committee on Government Assurances.

## V. GOVERNMENT MOTIONS.

### (1) Nomination of Five Members to serve on the Committee on Subordinate Legislation of the Assembly.

THE HON. THIRU M. KARUNANIDHI : Sir, I move—

"That this House nominates the following five **Members to** serve on the Committee on Subordinate Legislation of the **Legislative** Assembly for the financial year 1969–70 :—

1. Thiru N. Wilson Apollos.
2. Thiru S. Jayarama Reddiar.
3. Thiru K. Arivazhagan.
4. Thiru S. T. Adityan.
5. Thiru C. P. Chitrarasu."

MR. CHAIRMAN : The question is—

"That this House nominates the following five **Members** to serve on the Committee on Subordinate Legislation of the **Legislative** Assembly for the financial year 1969–70 :—

1. Thiru N. Wilson Apollos.
2. Thiru S. Jayarama Reddiar.
3. Thiru K. Arivazhagan.
4. Thiru S. T. Adityan.
5. Thiru C. P. Chitrarasu."

**The motion was put and carried.**